செய்தி வெளியீடு எண் : 2175 நாள் : 01.12.2022

செய்தி வெளியீடு.

தமிழக அரசின் அங்கக வேளாண்மைக் கொள்கையை உருவாக்குதல் தொடர்பாக தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், துறைத் தலைவர்கள், அங்கக வேளாண் பிரதிநிதிகள், அங்கக விவசாயிகள் அங்கக வேளாண்மை சார்ந்த அரசு சாரா நிறுவனத்தினர் ஆகியோருடன் இன்று (01.12.2022) தலைமைச் செயலகத்தில் இரண்டாம் கட்ட கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கடந்த 15.09.2022 அன்று தமிழக அரசின் அங்கக வேளாண்மைக் கொள்கையை உருவாக்குதல் தொடர்பாக தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் இக்கொள்கையினை உருவாக்குவதன் அவசியம் மற்றும் அதனை படிப்படியாக விரிவுபடுத்துவது குறித்தும் பிற மாநிலங்களில் பின்பற்றப்படும் அங்கக வேளாண்மைக் கொள்கை குறிப்பாக சிக்கிம், ஆந்திர பிரதேசம் போன்ற மாநிலங்களில் செயல்படுத்தப்படும் முறைகள் குறித்தும் ஆராய்ந்து இது தொடர்பான ஒரு வரையறுக்கப்பட்ட கொள்கையினை உருவாக்குவது குறித்து முதற்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக இன்று (01.12.2022) நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்கள் அங்கக வேளாண்மைக் கொள்கை குறித்து சுருக்கமாக எடுத்துரைத்தார். தலைமைச் செயலாளர் அவர்கள் இக்கொள்கையினை ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் ஆய்வு செய்து தேவையான திருத்தங்களை மேற்கொள்ளலாம் என அறிவுறுத்தினார். இவ்வங்கக வேளாண்மை விவசாயிகளிடையே விருப்பத்தின் அடிப்படையில் செயல்படுத்த அறிவுறுத்தலாம் என்றும், தற்போது அங்கக விவசாயம் செய்துவரும் விவசாயிகளின் வெற்றி கதைகளைக் குறித்து ஒரு நூலாக வெளியிட ஆவன செய்திடலாம் எனவும் அறிவுறுத்தினார்.

பாரம்பரிய வேளாண் உத்திகளை ஆராய்ந்து அவற்றின் மேன்மைத் தன்மையினை வேளாண் பெருங்குடி மக்களுக்கு உரிய பயிற்சி அளித்தும்

விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி பரவலாக்குவதன் இன்றியமையாமையை தலைமைச் செயலாளர் அவர்கள் வலியுறுத்தினார்.

வேளாண்மைத் துறையின் வேளாண் விரிவாக்க மையங்களில் மேம்படுத்தப்பட்ட அங்கக விதைகளை விற்பனை செய்ய தனி விற்பனைப் பிரிவினை ஏற்படுத்துவது அவசியம் எனவும் தலைமைச் செயலாளர் அறிவுறுத்தினார்.

இக்கொள்கையினை, தொகுப்பு அடிப்படையில் (Cluster Basis) விவசாயிகளின் விருப்பத்தின் அடிப்படையில் செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கலாம் என அறிவுறுத்தினார். இக்கொள்கையில் பல்வேறு கருத்துக்களை வேளாண் பிரிதிநிதிகளிடமிருந்து அறிந்து தேவைப்படும் பட்சத்தில் திருத்தங்களை மேற்கொண்டு ஒருவார காலத்திற்குள் அங்கக வேளாண்மைக் கொள்கையினை இறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தினார். மேலும், அடுத்த வேளாண் –உழவர் நலத்துறையின் நிதிநிலை அறிக்கையினை தாக்கல் செய்வதற்கு முன்னதாக இக்கொள்கையினை நடைமுறைப்படுத்தி அதனை அவ்வறிக்கையில் தெரிவிக்கும் விதமாக பணிகள் தொடங்கப்பட வேண்டுமென அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், சிறப்புச் செயலாளர், வேளாண்மை – உழவர் நலத் துறை ஆகியோர்களுடன் துறைத் தலைவர்கள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள், அங்கக வேளாண் பிரதிநிதிகள், அங்கக வேளாண்மை சார்ந்த அரசு சாரா நிறுவனத்தினர் மற்றும் துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in